2022 மே 7] [திரு. மா. சுப்பிரமணியன்]

மாண்புமிகு தமிழக முதல்வர், வணக்கத்திற்குரிய தளபதி அவர்கள் பொறுப்பேற்ற இந்த ஓராண்டு காலத்தில், அவர் ஏற்படுத்தியிருக்கிற கட்டமைப்பு பிரமிக்கத்தக்கதாக இருக்கிறதென்று பார்ப்பவர்களெல்லாம் பாராட்டுகின்றார்கள்.

நான், நேற்றும், நேற்றைய முன்தினமும், குஜராத் மாநிலத்தில் நடைபெற்ற 14-வது இந்திய அளவிலான சுகாதாரத் துறை அமைச்சர்களுடனான ஒரு மாநாட்டில் கலந்துகொள்வதற்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று சென்றிருந்தேன்.

அந்த மாநாட்டில் தமிழகத்திற்கு மிகப் பெரிய அளவிலான ஓர் அங்கீகாரம் கிடைத்தது. அது ஒரு மறுக்க முடியாத அங்கீகாரம். ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் 'Affordable, Accessible and Equitable health care for all' என்கின்ற ஓர் அமர்வுக்கு என்னைத் தலைமையேற்று நடத்தச் சொன்னார்கள்.

அவ்வாறு நடத்தச் சொன்னதற்கான காரணமாக அப்போது அவர், 'தமிழகத்தின் முதல்வர் தமிழகத்தில் மருத்துவக் கட்டமைப்பை மிகச் சிறப்பாகச் செய்துகொண்டிருக்கிறார்'; (மேசையைத் தட்டும் ஒலி) 'தமிழகத்தை கொரோனா பேரிடரிலிருந்து மீட்டெடுப்பதற்கு அவருடைய முயற்சிகள் பாராட்டத்தக்கவையாக இருந்துகொண்டிருக்கின்றன'; 'மக்களைத் தேடி மருத்துவம் என்கின்ற மகத்தான திட்டம் இன்றைக்கு உலகத்திற்கு முன்மாதிரியாக இருந்துகொண்டிருக்கிறது'; (மேசையைத் தட்டும் ஒலி) 'இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் 48 என்கிற அந்த மகத்தான திட்டத்தை இந்தியா முழுமைக்கும் நாங்கள் கொண்டுவர எத்தனித்திருக்கிறோம்' என்கின்ற செய்திகளைச் சொன்னார்கள். 'மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மருத்துவத் துறையில் ஒரு புரட்சியைச் செய்துகொண்டிருக்கிறார்' என்று மனதாரப் பாராட்டினார்கள்.

அந்த மாநாடு இன்றைக்கும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இன்றைய நிகழ்வில் பங்கேற்பதற்காக நேற்று மாலையே நான் அங்கே சொல்லிவிட்டு வந்தபோது, 7, 8 மாநில சுகாதாரத் துறை அமைச்சர்கள், 'நாங்கள் உங்களுடைய மாநில முதலமைச்சரைச் சந்திக்க வேண்டும், 'மக்களைத் தேடி மருத்துவம்' என்கின்ற திட்டத்தை எப்படி அவரால் செயல்படுத்த முடிகிறது?

[திரு. மா. சுப்பிரமணியன்] [2022 மே 7

என்கின்ற விஷயத்தை அவர்மூலம் கேட்டறிவது மட்டுமல்ல, அவருடைய வாழ்த்துகளையும் நாங்கள் பெற்று வரவேண்டும். அப்பொழுதுதான் நாங்களும் எங்கள் மாநிலங்களில் இதுபோன்ற திட்டங்களைச் செயல்படுத்திட முடியும்' என்று மகிழ்ச்சியோடு எடுத்துச் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–35

இதையும் தாண்டி இன்னொரு சிறப்பான விஷயம். ஒன்றிய அரசின் செயலாளர்கள், ஒன்றிய அரசின் மிகப் பெரிய அரசுப் பணி அலுவலர்கள், எங்களுடன் வந்திருந்த Mission Director (NHM) Dr. Darez Ahamed, I.A.S. அவர்களிடத்தில் இன்னுயிர் காப்போம் என்ற திட்டத்தை நீங்கள் எப்படிச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை 8 ஆம் தேதிக்குப் பிறகு டில்லிக்கு வந்து எங்களுக்கு விளக்கிக் கொடுங்கள், நாங்கள் அத்திட்டத்தை இந்தியா முழுமைக்கும் கொண்டுசெல்ல இருக்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற அளவில் ஒரு மகிழ்ச்சி நிறைந்த செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு இன்றைக்கு இந்தியாவிற்கே வழிகாட்டியாக பல மருத்துவத் திட்டங்களைத் தீட்டி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகச் சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், புதிதாக அமையவிருக்கின்ற இந்த 708 மருத்துவமனைகள் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய உள்ளத்தில் உதித்தவை என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலைஞர் அண்ணா அறிவாலயம் கட்டட திறப்பு விழாவிற்கு டில்லிக்குச் சென்றவர், வெறும் கட்டடத்தை மட்டும் திறந்து வைத்துவிட்டு வரவில்லை, ஒன்றிய அரசின் மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்தார். ஒன்றிய அரசின் அமைச்சர்கள் பலரைச் சந்தித்தார். தமிழகத்தின் தேவைகளை அங்கே தெரிவித்து அவற்றை தமிழகத்திற்காகக் கேட்டுப் பெறுவதற்கான பணிகளைச் செய்ததோடு மட்டும் நிறுத்திக்கொள்ளவில்லை. மரியாதைக்குரிய அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கிருந்த ஒரு மாதிரிப் பள்ளியை நேரடியாகச் சென்று பார்த்து, அந்த மாதிரிப் பள்ளியின் கட்டமைப்பு தமிழகத்திலும் வேண்டும் என்கின்றவகையில், இன்றைக்கு இத்திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்.